# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
## இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (01.03.2023 முதல் 05.03.2023 )

**அறிக்கைஎண் 017/2023** **தேதி.28.02.2023**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 17°செ முதல் 24°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 25°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 05°செ முதல் 09°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் மழை பெறப்படவில்லை.

**ஈரோடு மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

ஈரோடு மாவட்டத்தின் 24.02.23 முதல் 27.02.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 18°செ முதல் 20°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 74 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 16 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 11-14 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (24.02.2023 முதல் 27.02.2023) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 05.03.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 24/01 | 25/02 | 26/02 | 27/02 | தேதி | நாள்-1 01/03 | நாள்-2 02/03 | நாள்-3 03/03 | நாள்-4 04/03 | நாள்-5 05/03 |
| 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 33 | 34 | 35 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 33 | 33 | 34 | 35 | 35 |
| 20 | 20 | 19 | 18 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 21 | 21 | 22 | 22 | 22 |
| 3 | 2 | 3 | 3 | மேக மூட்டம் (ஆக்டர்) | 1 | 2 | 2 | 2 | 2 |
| 74 | 66 | 55 | 61 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 60 | 60 | 80 |
| 27 | 21 | 16 | 23 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 30 | 30 | 20 | 20 | 20 |
| 11 | 14 | 13 | 12 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 6 | 6 | 6 | 4 |
| 90 | 70 | 90 | 90 | காற்றுவீசும் திசை | 140 | 70 | 70 | 110 | 110 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (25.02.2023 முதல் 01.03.2023)**

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21°செ முதல் 22°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 20 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது.

சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4-6 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வடகிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபெட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| 01-03-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 02-03-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 03-03-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 04-03-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 05-03-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு் தெளிவான வானம் மற்றும்வறண்ட வானிலையுடன் காற்றின் வேகம் 4 - 8 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுபிறது. வெப்பநிலை கடந்த வாரத்தினை விட கூடி வருகிறது. ஓரிரு இடங்களில் தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது.<br>வறண்ட வானிலை தொடர்வதால், மண் ஈரத்தினைப்பொறுத்து மாலையில் நீர் பாசனம் செய்யவேண்டும். பயிர்கழிவு மூடாக்கு இடுவதால் மண் ஈரத்தினைப் பாதுகாக்கலாம்.<br>வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை செய்த தானியங்களை காயவைத்து தக்க முறையில் சேமிக்கவும். |
| மக்காச்சோளம் | பூக்கும் பருவம் | 45 முதல் 65 நாட்கள் வயதுடைய மக்காச்சோளப்பயிருக்கு போதிய நீர் பாசனம் செய்வதின் மூலம் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக அறுவடை காலத்தில் மகசூல் இழப்பு ஏற்படாமல் பாதுகாக்க முடியும். |
| கரும்பு | வளர் பருவம் | வறண்ட வானிலை நிலவுவதால் கரும்பில் இளங்குருத்து புழு வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் அடிக்கடி தண்ணீர் பாய்ச்சி வயலை நன்கு ஈரமாக வைத்துக்கொள்வதன் மூலம் இந்த தாக்குதலை குறைக்கலாம். மேலும் பயிர் மூடாக்கு செய்வதன் மூலமும் இந்த தாக்குதல் குறைவதோடு மட்டும் அல்லாமல் நீர் தேவையையும் குறைக்கலாம். |
| காய்கறி பயிர்கள் | வளர் பருவம் | வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் காய்கறி பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்கம் தென்பட்டால் 5 சத வேப்பம்கொட்டை சாறு கரைசலைத் தெளிக்கவேண்டும். |
| வாழை | | மேற்கு வேளாண் மண்டலத்தில் வறண்ட காற்றானது 4 – 8 கி.மீ வரை வீச வாயப்புள்ளதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு போதிய முட்டுகொடுக்கவேண்டும். |

| | | |
|---|---|---|
| கால்நடைகள் | | வறண்ட வானிலையை கருத்தில் கொண்டு சுத்தமான குடிநீரை போதுமான அளவு கால்நடை மற்றும் கோழிகளுக்கு கொடுக்கவும்.<br>வெப்பநிலை உயர்வாக காணப்படுவதால் கறவை மாடுகளுக்கு நாள் ஒன்றுக்கு தீவனத்துடன் 50 கிராம் டானுவாஸ் ஸ்மார்ட் (**TANUVAS smart**) தாது உப்புக்கலவையை அடர் தீவனத்துடன் கலந்து கொடுக்கவும். மேலும் சுத்தமான குடிநீரை போதிய அளவு வழங்கவும்.<br>கால்நடைகளுக்கு தொடர்ந்து கோமாரி நோய் தடுப்பு ஊசி பக்கத்திலுள்ள கால்நடை மருத்துவமயில் போட்டுக்கொள்ளவும்.<br>ஆடுகளுக்கு அம்மை நோய் தடுப்பு ஊசி போட்டுக்கொள்ளவும்.<br>தற்போது வெப்பநிலை உயர்ந்து வருவதால், கால்நடைகளை குளிப்பாட்டிய பிறகு காலை 11 மணிக்குள் செயற்கை கருத்தரிப்பு முறையினை மேற்கொள்ளவும். |

**குறுஞ்செய்தி**

- பூக்கும் பருவத்திலுள்ள மக்காச்சோளப்பயிருக்கு போதிய நீர் பாசனம் செய்வதின் மூலம் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக அறுவடை காலத்தில் மகசூல் இழப்பு ஏற்படாமல் பாதுகாக்க முடியும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**